1981 மார்ச் 26]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி ஆராய்ந்து சொல்ல நாம் ஒரு குழு அமைத்திருக்கிறோம். அவர்கள் அறிக்கை அளித்த பிறகு அந்த அறிக்கையின் அடிப்படையிலே செய்ய இருக்கிறோம். ஏதாவது மாறுதல் என்று இருக்கிறது. மாறுதல் வர வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தான் நான் இப்போது சுட்டிக் காட்டினேன்.

Full-time Watchmen in Aided High Schools

* 172 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Government have sanctioned a special allowance in lieu of House Rent Allowance to all Government Employees in rural areas with effect from 1st October 1979;

(b) whether it is being paid to teaching and non-teaching staff also working in Aided High Schools in such areas; and

(c) if so, the reason for the non-payment of the same to the full-time watchmen working in those schools?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) எல்லா முழு நேர சில்லரைச் செலவினப்பணியாளர்கட்கும் இச் சிறப்பூதியம் வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளதால், தனியார் பள்ளிகளில் பணிபுரியும் எல்லா முழுநேர இரவுக் காவலர்கட்கும் சிறப்பூதியம் வழங்கப்படுகிறது.

குடும்பநலத் திட்டத்தின் கீழ் ரூ. 10,000 வழங்குதல்.

* 173. வினா.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மத்திய சிறையில், நீண்டகால சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களில், இறந்துபோன அரசுப் பணியாளர்களின் வாரிசுகள் என்கிற வகையில், தமிழக அரசின் குடும்பநலத் திட்டத்தின்கீழ் வழங்கப் படும் ரூ. 10,000 த்தைக் கோரியுள்ளவர்கள், எத்தனை பேர்?

(இ) இவர்களது மனுக்கள் கொடுக்கப்பட்ட தேதிகள் யாவை?

(உ) இவர்களது மனுக்கள் தற்பொழுது எந்நிலையில் உள்ளன?